# அன்பு பகிர்வு இயக்கம்

Shalom

## செய்திமலர்

தனிப்பிரதி ரூ.10
ஆண்டு சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1000

மலர் 13 இதழ் 09 ஜூலை 2017




**உன் கூடாரத்தின் இடத்தை
விசாலமாக்கு;
உன் வாசஸ்தலங்களின் திரைகள்
விரிவாகட்டும்;
தடை செய்யாதே உன்கயிறுகளை
நீளமாக்கி,
உன் முளைகளை
உறுதிப்படுத்து**

ஏசாயா 54:2


ஆசிரியர்

**பேராயர் வே.தேவதாஸ்**



# உங்கள்
# சகோதரனிடமிருந்து...

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவ கிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் அன்பான ஆதரவுகளினாலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் தேவன் தந்த அழைப்பு மற்றும் தரிசனத்தின்படி 26 ஆண்டுகள் நிறைவேற்ற தேவன் கிருபை பாராட்டினபடியால் தேவனை துதிப்போம். உங்கள் யாவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை ஷாலோம் ஊழியர்களாகத் தெரிவிக்கிறோம்.

எத்தனையோ போராட்டங்கள், எதிர்ப்புகள், தேவைகள் மத்தியில் பலத்த கரத்துடன், ஓங்கிய புயத்துடன் இஸ்ரவேல் ஜனங்களை நடத்தி வந்த தேவகரம் பீல் மக்களை நடத்தி வந்தபடியால் தேவனைத் துதிக்கிறோம். 1991ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி தேவன் தந்த அழைப்பை ஏற்று ஊழியங்களை, கிடைத்த ஒரு சைக்கிள் உதவியுடன் ஆரம்பித்தோம். பீல் ஆதிவாசி 2 குடும்பங்கள் இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற்றார்கள் அதுதான் ஆரம்பம்.

இன்று தேவகிருபையால் 600க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களை உருவாக்கவும், 700க்கும் அதிகமான சபைகளை கிராமங்களில் எழுப்பவும்; சுமார் 1500 கிராமங்களில் முதல் முறையாக இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு விசுவாசிகளை எழுப்பவும் 300க்கும் அதிகமான கிராம ஆலயங்களை பிரதிஷ்டை செய்யவும் தேவன் பாராட்டின நன்மைகளை எப்படித் துதிக்காமல் இருக்க முடியும்? தேவனுக்கே மகிமை செலுத்தி எங்களைத் தாழ்த்தி அனைத்து 1 கோடி பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்தில் எங்களை அர்ப்பணிக்கிறோம். 01.07.2017 அன்று தேவனைத் துதித்து ஜெபிக்க மறவாதீர்கள்.

2020ம் ஆண்டில் 30 ஆண்டுகள் நிறைவு பெறும்போது 3 திருமண்டலங்கள்; 2000 ஸ்திர சபைகள்; 3000 கிராமங்களில் விசுவாசிகள்; 1000 கிராம ஆலயங்கள் கட்டி முடித்து குறைந்தது 1 இலட்ச குடும்பங்களை தேவனண்டை நடத்த அர்ப்பணித்துள்ளோம். தொடர்ந்து உங்கள் ஜெபங்கள், ஆதரவுகள் தேவ இராஜ்ஜியத்தைக் கட்ட அன்புடன் அழைக்கிறோம்.

தேவ அறுவடைப் பணியில் உங்கள்
அன்பு சகோதரன்

(பேராயர்.வே.தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள....
09377445468

# ஷாலோம் ஊழிய 26 ஆண்டுகள் நிறைவு விழா
## சிறப்புச்செய்தி

பேராயர். **வே. தேவதாஸ்**

"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடை செய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்..." ஏசாயா 54:2,3

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை ஷாலோம் பணித்தளத்திலிருந்து தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். 01.07.2017 அன்று பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவன் தந்த தரிசன பணியில் 26 ஆண்டுகளை நிறைவு செய்வதில் மகிழ்ச்சியுடன் தேவனுக்கு துதி செலுத்துகிறோம். சுவிசேஷ பணியில் உடன் பங்காளர்களாக இணைந்து ஜெபித்து தாங்கிய உங்கள் யாவரையும் விசேஷமாக ஆசீர்வதிப்பாராக!

இந்த ஷாலோம் ஊழியத்தில் புதிய 27ம் ஆண்டில் பிரவேசிக்கும் வேளையில் தேவனுடைய பாதத்தில் காத்திருந்து ஜெபித்த போது தேவன் தந்த வாக்குத்தத்த செய்தியை பீல் மக்களுடைய ஷாலோம் சபைகளுக்கு மட்டுமல்ல உங்களுக்காகவும் பகிர்ந்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். அந்த வாக்குத்தத்தத்தை ஏசாயா 54:2,3 வசனங்களில் வாசிக்கலாம்.

"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடை செய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்..." ஏசாயா 54:2,3

இந்த வாக்குத்தத்த ஆசீர்வாதத்தை தேவன் கொடுக்க தேவஜனமாகிய நம்மிடத்தில் சில காரியங்களை நாம் நிறைவேற்ற கர்த்தர் விரும்புகிறார்.

**(1) கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு :** தேவன் ஆசீர்வாதங்களை தரும் முன்பாக சில காரியங்களை நாம் விசுவாசத்துடன் செயல்படுத்த தேவன் எதிர்பார்க்கிறார். நம்முடைய கூடாரத்தின் இடத்தை விசாலமாக்க வேண்டும். விசுவாசத்துடன் தரிசனங்களை விரிவாக்க வேண்டும். ஆபகூக் தீர்க்கதரிசன புத்தகத்தில் தரிசனத்தை எழுதிவை... அதனை வாசி... விசுவாசி... நிச்சயமாக அது நிறைவேறும். நோவாவை தேவன் பேழை உருவாக்க கட்டளையிட்ட போது இவ்வளவு பெரிய அளவாக என நினைக்கவில்லை. தேவன் ஒரு

மிகப்பெரிய திட்டத்தை வைத்துள்ளார் என்று விசுவாசித்தான். லூக்கா 5ம் அதிகாரத்தில் தேவன் பேதுருவின் மூலமாக மீன்களை பிடிக்க அற்புதத்தை செய்த போது இரண்டு காலியான படகுகளை வைத்திருந்தபடியால் பிடித்த மீன்களை படகில் போட்டு ஆசீர்வாதத்தை பெற்றார்கள். இல்லையெனில், பிடித்த மீன்களை கடலிலே போட்டுவிட வேண்டியதாயிருக்கும். பிரியமானவர்களே, இந்த வருடத்தில் தேவன் மிகப்பெரிய ஆசீர்வாதங்களை கட்டளையிட தீர்மானித்தபடியால் கூடாரத்தின் இடத்தை (தரிசனங்களை) விரிவாக்குவோம். "தேவனுக்காக பெரிய காரியங்களை செய். தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்" **"Attempt great things for God; And expect great things for God"** என்று வில்லியம் கேரி கூறிய வாசகத்தை விசுவாசத்துடன் அறிக்கை செய்வோம்.

**(2) உன் வாசஸ்தலத்தின் திரைகள் விரிவாகட்டும் :** இரண்டாவதாக கூடாரத்தின் இடத்தை விசாலமாக்குவது மட்டுமல்ல வாசஸ்தலத்தின் திரைகளை விரிவுபடுத்த வேண்டும். கூடாரத்தில் திரைகள் மிக முக்கியமானதாகும். திரைகள் இருந்தால்தான் உள்ளே வசிக்க முடியும். திரைகள் இருந்தால் தான் வெயில், மழை காற்றுக்கு நீங்கலாகி வாழ முடியும். திரைகள் இருந்தால் தான் பாதுகாவல் உண்டாகும். பழைய ஏற்பாட்டில் தேவ ஜனங்களுக்கு அதாவது முழு இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்திர பாதையில் மேகஸ்தம்பமாக மூடு திரையாக பாதுகாத்து; இரவில் அக்கினிஸ்தம்பமாக பாதுகாவல் தந்து வழிநடத்தினார். தேவன் நம்மை வேலி அடைக்கப்பட்ட தோட்டம் என்று அழைக்கிறார். பிரியமானவர்களே, நம் குடும்பம், தொழில், ஊழியம் சபைகள் எல்லாம் அபிஷேகம், இயேசுவின் இரத்தம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகை இவைகளால் நாம் மூட வேண்டும். அப்போது தான் தெய்வீக பாதுகாவல் உண்டாகும். எவ்வளவுக்கு எவ்வளவு இயேசுவின் இரத்தத்தின் வல்லமையை உச்சரித்து,அபிஷேகத்தில் வளருகிறோமோ அவ்வளவாக ஆவிக்குரிய திரைகள் விரிவாகும். தேவபாதுகாவல் நம்மில் தங்கியிருக்கும்.

**(3) தடை செய்யாதே :** தேவன் நம்மை ஆசீர்வதிக்க பிரியமாயிருக்கிறார். வாக்குத்தத்தங்களை எல்லாம் தந்து அதை நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார். அநேக தேவ பிள்ளைகளுக்கு ஊழியர்கள் மூலமாக, இல்லையெனில் நேரடியாக தரிசனங்கள், வார்த்தை மற்றும் வசனத்தின் மூலமாக பேசியிருப்பார். சில நேரங்களில் ஏன் நிறைவேறவில்லை என அங்கலாய்த்து போவதுண்டு. தேவன் சொல்கிறார். "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள்

தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது." ஏசாயா 59:1,2

நம்முடைய தவறுகள், மீறுதல்கள், அக்கிரமங்களை உணர்ந்து அவைகளை நாம் அறிக்கை செய்து விட்டு விடும்போது தேவன் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். நியாயாதிபதிகள் புத்தகத்தை வாசித்துப் பாருங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை மறந்து பாவம் செய்த போது அவர் விலகுகிறார். சத்துருக்கள் கைகளில் ஒப்புக் கொடுக்கிறார். மனம் திரும்பி அவர்கள் தேவனை நோக்கி பார்த்த போது இரட்சிப்பை கட்டளையிடுகிறார்.

அடுத்ததாக நம்முடைய அவிசுவாசமே தடையாக அமைகிறது. இஸ்ரவேல் தேசத்தை உளவு பார்க்க சென்றவர்களில் 2 பேர் மட்டும் தான் விசுவாச வார்த்தைகளை பேசுகிறார்கள். அவர்கள் இருவரை தவிர வேறு யாரும் வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசிக்கவில்லை. கர்த்தருடைய தாசனாகிய மோசே தேவைகளை நினைத்து பிரமித்த போது தேவன் என்ன சொன்னார்? "அதற்கு கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய் என்றார்." எண்ணாகமம் 11:23 அழைத்த தேவன் உண்மை உள்ளவர். நம் வாழ்க்கையிலும், குடும்பத்திலும், ஊழியத்திலும் அவர் சொன்னபடி நிறைவேற்றுவார். உங்களுக்காக கர்த்தரிடத்திலிருந்து ஒரு காற்று புறப்பட்டு வரும். அற்புதமாக எல்லா தேவைகளையும் தேவன் சந்திப்பார்.

மாற்கு 9ம் அதிகாரத்தில் இயேசுவினிடத்தில் ஊமையான ஆவி பிடித்த மகனை ஒரு தகப்பன் கொண்டு வந்து சீஷர்களால் முடியாமற்போயிற்று என்று இயேசுவினிடத்தில், மனதிரங்கி எங்களுக்கு உதவி செய்யும் என்று கேட்டான். அப்போது இயேசு என்ன கூறினார் என்பதை வாசித்து பாருங்கள்.

"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன் விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்." மாற்கு 9:23,24 அந்த பிள்ளையின் தகப்பனிடத்தில் விசுவாசம், அவிசுவாசம் இரண்டும் காணப்பட்டது. அவிசுவாசம் நீங்கியபோது தடைகள் நீங்கியது. விடுதலையும், சுகத்தையும் பெற்று கொண்டான். பிரியமானவர்களே, நம் வாழ்வில் தேவ ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ளவும் நம்மில் உள்ள

ஜூலை 3 — நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். சங்கீதம் 32:8

தடைகளை எடுத்துவிட்டு விசுவாசத்துடன் முன்னேறுவோம்.

**(4) உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து:** கூடாரம் விரிவாக்கப்பட்டு திரைகள் எல்லாம் மூடப்பட்டாலும் கயிறுகள் நீளமாக்கப்பட வேண்டும். கயிறுகளின் முனைகள் சரியாக இணைக்கப்பட வேண்டும், இல்லையெனில் திரைகளை இணைக்க முடியாது. கயிறுகள் என்பது நாம் தேவனுடன் உள்ள உறவை காட்டுகிறது. இரு முனைகளில் கயிறுகள் சரியான நீளம் இல்லையெனில் பாதுகாவல் இல்லை. ஜெபத்தின் மூலமாகத் தான் தேவனுடன் உள்ள உறவு மேன்மைப்படும். தேவன் சபையில், குடும்பத்தில் தனிப்பட்ட வாழ்வில் அவருடன் உள்ள உறவை புதுப்பிக்க, அதிகப்படுத்த ஆபிரகாமை போல தேவன் நம்மை சிநேகிதனாக உருவாக்க நம்முடன் உறவாட விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவும் நம்மை ஊழியக்காரனாக அல்ல சிநேகிதராக அழைக்கிறார். ஜெப வாழ்வில் நம்மை அர்ப்பணிப்போம். குறிப்பாக உபவாசித்து ஜெபிக்கும் போது மேன்மையான ஆசீர்வாதங்கள் உண்டாகும்.

அடுத்து முளைகளை உறுதிப்படுத்து என்று தேவன் சொல்கிறார். திருமண வீடு, விழாக்கள், கூட்டங்களில் இரும்பு கம்பிகளை முளையாக அடிப்பார்கள். எவ்வளவு ஆழமாக உறுதியாக பூமிக்கு கீழே பிடிக்கிறதோ அவ்வளவு உறுதியாக கூடாரங்கள் அமையும். அன்பானவர்களே, கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையில் வேத வசனத்தில் உறுதியாக நாம் காணப்படும்போது இயேசு கிறிஸ்துவின் அன்பில் உறுதியாக நிலைக்கும் போது நம் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், சபை, ஊழியர்கள் உறுதியாக இருக்கும். அஸ்திபாரம் கல்லின் மேல் கட்டப்பட்ட வீடாக நிலைத்திருக்கும். “நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.” யோவான் 15:7

கடைசியாக, ஏசாயா 54ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களை நிச்சயமாக நமக்கு கட்டளையிடுவார். நித்திய கிருபை (8,10) சந்ததியின் ஆசீர்வாதம் (13) பாதுகாவல் (14) சத்துருவின் காரியங்களுக்கு விரோதமாக தேவகரம் (17) இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து நீ வலதுபுறத்திலும்,இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய் (3) தேவன் தாமே 27ம் ஆண்டு ஊழியப்பாதையில் பெருக்கமான ஆசீர்வாதங்களை, விரிவாக்கப்பட்ட தேவ ஆசீர்வாதங்களை பணித்தளத்தில் மட்டுமல்ல, ஷாலோம் ஊழியங்களை தாங்குகிற உங்கள் ஒவ்வொருவர் மேலும் கட்டளையிடுவாராக! ஆமென்!

ஜூலை 4 — கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும். சங்கீதம் 32:10

# சுதேச ஊழியர்

## அஜ்மீர்சிங் டாமோர்
சாட்சி



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் அஜ்மீர்சிங் டாமோர். நான் மத்தியப்பிரதேசம், ஜாபுவா மாவட்டத்திலுள்ள சாம்னா தாமனி கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி.

எங்கள் குடும்பத்தில் யாருக்கும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து தெரியாது. நான் பாவங்களை பாவம் என்று அறியாமல் செய்து வந்தேன். நான் திடீரென்று சுகவீனப்பட்டேன். அநேக மருத்துவர்களிடம் சென்றும், மந்திரவாதிகளையும் நாடினேன் பலனில்லை ஆகையால் எனது வாழ்வில் சந்தோஷம், சமாதானம், நிம்மதி இல்லாது, சோர்ந்து போனேன். வேதனையோடு இருந்த நேரத்தில் எங்கள் கிராமத்தின் பக்கத்துக் கிராமமான பாடல்வா கிராமத்தில் உள்ள ஷாலோம் திருச்சபைக்கு செல்லும்படியாக என்னை யாரோ உந்துவதை என்னால் உணரமுடிந்தது.

ஆகவே ஒரு ஞாயிற்றுக்கிழமை பாடல்வா கிராம சபைக்குச் சென்றேன். அங்கு ஊழியம் செய்து வந்த போதகர் ரமேஷ் வாசுனியா அவர்களும், சபையாரும் எனக்காக பாரத்தோடு தேவனிடத்தில் விண்ணப்பம் செய்தார்கள். உடனடியாகவே தேவன் எனக்கு பிசாசின் கட்டுகளில் இருந்து பூரண விடுதலையைக் கொடுத்தார். எனது சுகவீனம் என்னை விட்டு நீங்கிற்று. அதன்பின் இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவன் என்று விசுவாசித்து எனது பாவங்களை அறிக்கையிட்டு இரட்சிப்பினைப் பெற்று தொடர்ந்து சபைக்குச் செல்ல ஆரம்பித்தேன்.

அதன்பின் தேவன் என்னை அபிஷேகித்து ஊழியத்திற்கென்று அழைத்தார். அந்த அழைப்பினை ஏற்று நான் குடும்பமாக ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து எங்கள் சொந்த கிராமத்தை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறோம். எங்கள் ஊழியங்களுக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**Sponsor Name : Mr. Loyola.F.B, (Tuticorin).**

**நீங்களும் மாதந்தோறும் ரூ.2500 கொடுத்து ஒரு பீல் சுதேச ஊழியரை உங்கள் குடும்பத்தின் அல்லது சபையின் அல்லது ஊழியத்தின் சார்பில் தாங்க முன்வாருங்கள்.**

ஜுலை 5

கர்த்தரை நம்பி நன்மை செய்.

சங்கீதம் 37:3

# மிஷனெரி வாழ்க்கை வரலாறு

## அப்போஸ்தலனாகிய அந்திரேயா



கலிலேயாவைச் சேர்ந்த பெத்சாயிதாவில் பிறந்த அந்திரேயா அப்போஸ்தலனாகிய பேதுருவின் உடன்பிறந்த தம்பி. இவர்கள் கப்பர்நகூமில் மீன்பிடிக்கும் தொழிலைச் செய்து வந்தார்கள். இவர்களது தகப்பனாரின் பெயர் யோவான். தாயின் பெயர் யோஹன்னா.

அந்திரேயா ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வமுள்ளவராக இருந்தார். யோவான்ஸ்நானனின் பேச்சால் கவரப்பட்டு அவரது சீடர்களில் ஒருவரானார். அவரது பேச்சில் சொல்லப்பட்ட மேசியாவுக்காகக் காத்திருந்தார்.

"இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று யோவான்ஸ்நானன் இயேசுவானவரைக் குறித்துச் சாட்சி கொடுத்தார்.

யோவான்ஸ்நானனின் சீடர்களில் இருவர் இயேசுவுக்குப் பின் சென்றனர். இவர்களில் அந்திரேயாவும் ஒருவர் (யோவான் 1:40)

இவரே கிறிஸ்துவின் முதல் சீடர். யோவான் ஸ்நானனின் சாட்சி யைக் கேட்டபின்னர் இயேசுவோடு உறவாடிய அந்திரேயா அவர்தான் மேசியா என்பதைத் திட்டவட்டமாக அறிந்துக் கொண்டார்.

"மேசியாவைக் கண்டோம்" என்று கூறி தனது சகோதரன் பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தார் (யோவான் 1:41,42)

அந்திரேயாவை மீண்டும் வேதாகமத்தில் சந்திக்கும் போது அவர் ஒரு பையனை இயேசுவிடம் அழைத்து வருகிறார். அந்தப் பையனிடமிருந்த ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு இயேசுவானவர் ஐயாயிரம் பேருக்கு உணவளிக்கிறார் (யோவான் 6:5-14).

பின்னர் அவர் சில கிரேக்கர்களை இயேசுவானவரிடம் அழைத்து வருவதைக் காண்கிறோம். அப்போது இயேசு மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது என்கிறார் (யோவான் 12:20-23)

அந்திரேயா இயேசுவே மேசியா என்பதை அறிந்து கொண்டவுடன் முதலில் பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தார்; பின்னர் சிறு பையனை இயேசுவிடம் அழைத்து வந்தார்; கடைசியாக கிரேக்கர் சிலரை இயேசுவிடம் அழைத்து வந்தார்.



நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். சங்கீதம் 37:39

அந்திரேயா அப்போஸ்தலர்களாகிய பேதுரு, பவுல் இவர்களைப் போலத் தன் பேச்சினால் ஆயிரக்கணக்கானவர்களை இயேசுவண்டை அழைத்து வரும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை; என்றாலும் ஒவ்வொருவராக ஆண்டவரிடம் அழைத்து வரும் வல்லமையைப் பெற்றிருந்தார்! ஊழிய வாஞ்சையுடைய, ஆனால் பேச்சுத் திறமையற்ற பலருக்கு அந்திரேயா முன்மாதிரியாக இருக்கிறார்!

இரத்தச்சாட்சியாக மரித்த அந்திரேயா!

அந்திரேயா காக்கசீய மலையடிவாரத்தில் ஊழியம் செய்யச் சென்றார். தற்போது இந்தப் பகுதி ரஷ்யாவில் ஜார்ஜியா மாகாணத்தில் உள்ளது. அங்குள்ள சைத்திய மக்களுக்கு கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தார்.

இதன் பின்னர் அவர் பைசாண்டியம் (தற்போதைய இஸ்தான்புல்)பகுதியில் சபைகளை நிறுவினார். ஸ்டாகிஸ் என்னும் ஊழியரைப் பேராயராக அபிஷேகம் செய்தார். இந்த ஊழியத்தின்போது அவர் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார்; கல்லால் எறிந்து விரட்டப்பட்டார்!

இதன் பின்னர் கிரீஸ் நாட்டில் திரேஸ், மாசிடோனியா பகுதிகளில் ஊழியம் செய்தார். இறுதியாக பட்ரோஸ் என்ற பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார்.

அங்கே அதிபராக இருந்த ஏஜியேடிஸ் என்பவரின் மனைவி மேக்சிமில்லா அந்திரேயாவின் பேச்சைக் கேட்டு மனம் திருந்தினாள். இதைக்கண்ட அதிபர் ஆத்திரமடைந்தார். அந்திரேயா தனது ஊழியத்தைக் கைவிடாவிட்டால் அவரைச் சித்திரவதை செய்யப்போதவதாகக் கூறிப் பயமுறுத்தினார். ஆனால் அந்திரேயாவோ அவரையும் மனம் மாற்ற முயற்சி செய்தார்.

கடுங்கோபம் கொண்ட ஏஜியேடிஸ் அந்திரேயாவைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படி கட்டளையிட்டார். அந்திரேயாவைப் பெருக்கல் வடிவ (X) சிலுவையில் அறைந்தனர். இரண்டு நாட்கள் சிலுவையில் தொங்கி வேதனையை அனுபவித்த போதிலும் அங்கு வந்தவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றிச் சாட்சி பகர்ந்தார்.

என்னை ஏற்றுக் கொள்ளும் கிறிஸ்து இயேசுவே, உம்மை நான் பார்த்தேன்; உம்மை நான் நேசித்தேன்; உம்மில் நான் இருக்கிறேன். உமது நித்திய ஆளுகையின் சமாதானத்தில் என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஜெபித்து தனது ஆவியை விட்டார் அந்திரேயா.

கி.பி. 60ஆம் ஆண்டு நவம்பர் இறுதி நாள் இரத்தச் சாட்சியாக மரித்தார் அந்திரேயா. மேக்சிமில்லா அந்திரேயாவின் உடலை எடுத்து, பட்ரோசில் அடக்கம் செய்தாள். பேரரசர் கான்ஸ்டன்டைனின் மகன் கான்ஸ்டன்டியஸ் பேரரசரானபோது, கி.பி.356இல் அந்திரேயாவின்

உடல் எலும்புகளை மட்டும் எடுத்துச் சென்று பைசாண்டியத்திலுள்ள தூய அப்போஸ்தலர் ஆலயத்தின் பீடத்தில் வைத்தார். கபால எலும்பு பட்ரோசிலேயே இருந்தது.

கி.பி. 1460ஆம் ஆண்டு துருக்கியர் பைசாண்டியத்தைக் கைப்பற்றிய பின்பு, அந்திரேயாவின் கபால எலும்பு பாதுகாப்புக்காக ரோம் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டு புனித பேதுரு ஆலயத்தில் வைக்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு போப்பாண்டவர் ஆறாம் பால், புனித அந்திரேயாவின் கபால எலும்பை பட்ரோசிலுள்ள கிரேக்க ஆர்தோடக்ஸ் திருச்சபைக்குத் திரும்ப அளித்தார். தற்போது புனித அந்திரேயாவின் கபால எலும்பு வைக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரு பேராலயம் கட்டப்பட்டுள்ளது.

புனித அந்திரேயா இறந்து பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவரது வேறு சில நினைவுச் சின்னங்கள் ஒரு கப்பலில் ஸ்காட்லாந்து நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டன. கரையை நெருங்குமுன்னர் அந்தக் கப்பல் விபத்துக்குள்ளாகியது. உயிர் தப்பிய மாலுமிகள் நீந்திக் கரை சேர்ந்து கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தனர். அந்தக் கடற்பகுதி புனித அந்திரேயா வளைகுடா என்று அழைக்கப்படுகிறது. ஸ்காட்லாந்தின் புனித பிதாவாகப் போற்றப்படுகிறார்! இங்கிலாந்து நாட்டுக் கொடியில் புனித அந்திரேயாவின் சிலுவை என்றழைக்கப்படும் **X** வடிவ சிலுவைக்குறி காணப்படுகிறது!


## வாழ்த்துகிறோம்



**Rt. Rev. S.E.C.தேவசகாயம்**, M.A.B.D.,
(பேராயர், தூத்துக்குடி-நாசரேத் திருமண்டலம்)

தூத்துக்குடி-நாசரேத் திருமண்டலத்தின் 2வது பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்டுள்ள தங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறோம். உங்கள் காலத்தில் தூத்துக்குடி-நாசரேத் திருமண்டலம் எல்லாவிதத்திலும் செழிப்படையவும், ஆவிக்குள் வளர்ந்து எண்ணற்ற மக்களை திருச்சபையில் சேர்க்கவும், உங்களது ஊழியம் கர்த்தரால் மென்மேலும் ஆசீர்வதிக்கப்படுவதாக! உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

இப்படிக்கு,
அன்பு பகிர்வு இயக்கம்,

**பேராயர் வே. தேவதாஸ் குடும்பம்**
பீல் ஆதிவாசி ஊழியர்கள்,
ஷாலோம் திருச்சபைகள் (குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான்)


**ஜூலை 8** — அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை. சங்கீதம் 62:6

# அற்புதமான ஆரம்பம்! யார் அசட்டை பண்ண முடியும்

01.07.1991 அன்று தான் குஜராத் மாநிலத்தில் ஜாலோத் ஊருக்கு வந்து முதன்முதலாக ஷாலோம் ஊழியப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. அற்பமான அந்த நாளுக்கு முன்பாக நாங்கள் தேவனால் உருவாக்கப்பட்ட நாட்களை மறக்கவே இயலாது.

14.10.79 அன்று நான் (சகோ. தேவதாஸ்) இரட்சிக்கப்பட்டேன்

04.11.79 அன்று கர்த்தர் என்னைப்பேர்சொல்லி அழைத்து ஊழிய அழைப்பையும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் தந்தார்.

07.11.81 அன்று முழு நேர ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்தேன்.

04.01.82 முதல் 31.07.85 வரை 3 வருடங்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவில் இணைந்து வேதாகம பயிற்சி பெற்று வட இந்தியாவில் மிஷனெரி பணியாற்றுதல்.

08.07.85 அன்று மிஷனெரி சகோதரி வஹிதாவுடன் திருமணம்

01.08.85 முதல் 30.06.90 வரை 5 வருடங்கள் குடும்பத்துடன் தரிசனமாகக் கண்ட பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஆத்தமாக்களை தேவனண்டை நடத்தி சபைகளை உருவாக்குதல்.

01.07.90 முதல் 15.12.90 வரை EFICOR ஸ்தாபனத்தில் 6 மாத சமூகப்பணி பயிற்சி பெறுதல்.

29.12.90 நாலுமாவடி இயேசு விடுவிக்கிறார் திறப்பின் வாசல் ஜெபத்தால் தாங்கப்படும் ஊழியர்களாய் மற்றும் ஷாலோம் ஊழியம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

CMC RUHSA நிறுவனத்தில் Health & Rural Development Training 1மாதம் பயிற்சி.

22.02.91 அன்று குஜராத் வந்தடைந்தோம்.

01.07.91 ஜாலோத் பணித்தளம் வரும்வரை அதிகமான போராட்டங்கள், பிரச்சனைகள் தனிமையான ஆத்துமாக்கள் அற்ற நிலைமை என பலவிதமான சூழ்நிலைகள். பல்வேறு போராட்டங்களின் மத்தியிலும் துயரத்தின் பாதைகளிலும் ஆரம்பத்தில் நடந்து தேவ ஊழியத்தை விடாமல் அவரின் சித்தப்படி செய்து வருகிறோம். தொடர்ந்து எங்களுக்காகவும் ஷாலோம் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்." எரே. 1:5**

ஜூலை 9
எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். சங்கீதம் 62:8

# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவ கிருபையால் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் மூலமாக கடந்த 26 வருடங்களாக 600க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர் குடும்பங்களை எழுப்பி பயிற்சியளிக்க தேவன் கிருபை தந்தார். அவர்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வெளிப்படத் தக்கதாக அற்புத அடையாளங்களுடன் சுமார் 700 கிராமங்களில் சபைகள் உருவாக்க தேவன் கிருபை தந்தார். தேவகிருபையினாலும் அநேக தேவஜனங் களின் உதாரத்துவமான காணிக்கைகளினாலும் சுமார் 300க்கும் அதிகமான கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தேவனுக்கே மகிமை!

கர்த்தருக்கு சித்தமானால் இந்த 2017ம் ஆண்டில் 250 கிராமங்களில் ஆலயங்கள் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம். உடனடியாக 100 கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட வாய்ப்புகள் உருவாகியுள்ளது. (35X 20 ) ( 40 X 20) ( 50 X 20) அளவுகளில் கட்டுவதற்கு ரூ. 2.5 இலட்சங்கள், ரூ. 4 இலட்சங்கள் ரூ. 6 இலட்சங்கள் ஜெபித்து கொடுத்து தாங்கக்கூடிய நிதி ஆதரவாளர்கள் உடனடியாக தேவை உங்கள் குடும்பத்தின் சார்பிலோ சபையின் சார்பிலோ கட்டி கொடுக்க முன்வாருங்கள்.

கிராம ஆலயம் கட்டி முடித்த பின்பு தாங்குகிற நீங்களே வந்து பிரதிஷ்டை ஆராதனைகளில் பங்கு கொள்ளலாம். பிரதிஷ்டை ஆராதனை DVD மற்றும் புகைப்பட ஆல்பத்தை தங்களுக்கு அனுப்பிவைப்போம். முழு ஆலய கட்டிட நிதி தர இயலாவிட்டாலும் ரூ. 1 இலட்சம் ரூ. 50,000/- ரூ. 20,000/- ரூ. 10,000/-இல்லையெனில் முடிந்த நிதிஉதவி தந்து பங்காளர்களாக இணைந்து கட்டி கொடுக்க முன் வரலாம்.

மேலும் உங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு இந்த மிஷனெரி ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன்வாருங்கள்.



ஜூலை 10 என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது; பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது. சங்கீதம் 62:7

# செய்ய வேண்டிய வேலையோ மிகப்பெரியது

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, தேவன் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் திறந்த வாசலையும் பலத்த அறுவடையையும் கட்டளையிட்டுள்ளார். தேவனுக்கு சித்தமானால் 2020ம் ஆண்டுக்குள் 1000 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களையும் 1000 திருச்சபைகளையும் எழுப்பி குறைந்தது 1 இலட்ச பீல் குடும்பங்களை தேவனண்டை வழிநடத்தி ஆவியானவரின் ஒத்தாசையுடன் தேவராஜ்ஜியத்தை கட்டி வருகிறோம்.







பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் சில..

**நிதி உதவி அனுப்பும் போது Sharing Love Mission என்ற பெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து ஷாலோம் கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்றுகுறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

## Bank Account Details

| | |
|---|---|
| வங்கிக் கணக்கு | : SHARING LOVE MISSION (Tuticorin Branch) |
| TMB வங்கிக் கணக்கு எண் | : 106100710400009 (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : 105010100094373 (IFS Code : UTIB0000105) |





ஜுலை 11 வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. சங்கீதம் 65:11



Shalom CHARITY MISSION™



# ஷாலோம் சேரிட்டி மிஷன்

## பீல் ஆதிவாசி மக்களின் முன்னேற்ற பணிகளுக்காக ஷாலோம் ஊழியத்தின் இணையான சமூக சேவை பணி

**Compassion Project மூலமாக தாங்கப்பட்ட 800க்கும் அதிகமான நம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க அன்பின் வேண்டுகோள்!**

### *பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தரிசன பணியான ஷாலோம் ஊழியம்*

நம் பரந்த பாரததேசத்தில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் இணைந்து இருக்கும் பகுதிகளில் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பாலான பீல் மக்கள்திருடுவதும், சாராயம் குடித்து வாழ்வதும், மந்திரவாதிகளைநாடி பில்லி சூனியங்களை செய்து பிசாசின் பிடியினாலும், சாபங்களினாலும், பாவத்தின் கட்டுகளில் வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பாலான கிராமங்களில் மின்சாரம், சாலை மற்றும் போக்குவரவு சாதன வசதி; மருத்துவம், கல்வி போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறாதவர்கள். கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசிகள் தங்கள் பிள்ளைகளின் படிப்பை குறித்து அக்கரையற்றவர்கள். பெரும்பாலும் தங்கள் பிள்ளைகளை விவசாயத்திலும், ஆடு மாடுகள் மேய்ப்பதிலும்; கூலி வேலைக்கு அனுப்புகிறதும்; தங்கள் வீடுகளில் சிறிய பிள்ளைகளை கண்காணிக்கவுமே வைத்துக் கொள்வார்கள். தேவனுடைய அநாதி திட்டத்தின்படி சகோதரர் தேவதாஸ் அவர்கள் குடும்பத்தை தேவன் பெயர் சொல்லி அழைத்து; பீல் மக்கள் தரிசனத்தை தந்து இந்த ஒரு ஜாதி பீல் மக்களை உங்களுக்கு தருவேன் என வாக்கு கொடுத்து குஜராத்தில் ஜாலோத் என்ற கிராமத்தை மையமாக வைத்து 1991ம் ஆண்டு ஜூலை மாதம் ஷாலோம் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டது. வாடகைக்கு கிடைத்த பேய் பங்களாவில் ஜெபித்து நடத்தப்பட்ட ஜெபக் கூட்டத்தில் நோய், சாபம், பிசாசின் பிடி மற்றும் பாவக்கட்டுகளிலிருந்து விடுதலை பெற ஆரம்பித்தார்கள்.

**ஜூலை 12** கர்த்தராகிய ஆண்டவரே, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே பலப்படுத்தும்.
நியாயாதிபதிகள் 16:28

## பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களும், கிராம சபைகளும்

பல நூறு குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து தேவனை ஏற்றுக் கொண்டபோது 1 கோடிக்கும் அதிகமான பீல் மக்கள் இரட்சிக்கப்பட தமிழ்நாட்டிலிருந்து அல்ல சொந்த ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று அதிகபாரம் கொண்ட பீல் சுதேச ஊழியர் குடும்பங்களை எழுப்ப தேவன் பாரம் தந்தார். அதன்படியே கடந்த 26 ஆண்டுகளில் 600க்கும் அதிகமான பீல் சுதேசஊழியர்களைஎழுப்பி பயிற்சிவிக்கவும், போதகர்களாகஅபிஷேகிக்கவும் தேவன் கிருபை தந்தார். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களாகிய இவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தி அற்புத அடையாளங்களுடன் 700க்கும் அதிகமான பீல் கிராம சபைகளை உருவாக்க கிருபை தந்தார். இதுவரை 300க்கும் அதிகமான கிராம ஆலயங்களை கட்டிமுடித்து பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்துள்ளார். கர்த்தருக்கு சித்தமானால் 2020ம் ஆண்டிற்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள், 1000 கிராம ஆலயங்களை கட்டி எழுப்பவும் இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களை தேவனண்டை நடத்தவும், எழுப்பின ஷாலோம் சபைகள் அவர்கள் மூலமாக முழு பீல் மக்கள் இரட்சிக்கப்படவும்; பாரத தேசத்திற்கு இவர்கள் ஆசீர்வாதமாக உருவாக செயல்பட்டு வருகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!


சுதேச ஊழியர் கூடுகை

## பீல் ஆதிவாசி மாணவர்களின் கல்வி பணி

கல்வியற்ற மிகக் குறைவாக உள்ள பீல் மக்கள் மத்தியில் முதலாவதாக 600க்கும் அதிகமான சுதேச ஊழியர்களின் பிள்ளைகளில் சுமார் 1200 மாணவர்களை நம் ஷாலோம் ஊழியத்தின் இணை ஊழியமான ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக தாங்கி வருகிறோம். அதற்கு அன்பு சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் **Managing Trustee** ஆகவும்; சகோ. கிளாட்சன் டைட்டஸ், **National Director** ஆக ஊழியம் செய்து வருகிறார்கள். இராஜஸ்தானில் ஷாலோம் பள்ளிக்கூடம் மற்றும் 3 விடுதிகள் மற்றும் அருகில், மற்றும் தூரத்தில் உள்ள நல்ல பள்ளிக்கூடம், விடுதிகளில் தங்கி பயின்று மேற்படிப்பு, கல்லூரிகளில் படித்து சிலர் நல்ல வேலைகளை பெற்றும் சபைக்கு தூணாகவும் சாட்சியாகவும் வாழ்கிறார்கள்.


உணவு பராமரிப்பு

ஜுலை 13 கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள். யோவான் 16:24




## *2016 வரை நடைபெற்ற Compassion Project*

தேவகிருபையால் குஜராத்தில் ஹிரோலா, ஜெரி மற்றும் மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியா கிராமத்தில் உள்ள ஷாலோம் சபைகளை மையமாக வைத்து அந்தக் கிராமங்களில் உள்ள சுமார் 800 ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வி அறிவு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் உணவு, உடை, தேவையான நோட் புத்தகங்கள், பள்ளிக்கான கட்டணம், மற்றும் சிறப்பு **Tuition** மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற வாய்ப்புகள் கொடுக்கப்பட்டது.

ஆனால் 2017ம் ஆண்டு முதல் நிதிஉதவிகள் இந்திய அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் 3 கிராம ஆதிவாசி மாணவர்களின் கல்விப்பணி பாதிக்கப்பட்டுள்ளது. இதில் 250க்கும் அதிகமான மாணவர்கள் 1-5 வகுப்பு வரையிலும் சுமார் 300 ஆதிவாசி மாணவர்கள் 6-9 வரையிலும் சுமார் 250 ஆதிவாசி மாணவர்கள், 10-12 மற்றும் உயர்கல்விக்கு ஆயத்தமாக உள்ளார்கள். இது நமது பணியில் மிகப்பெரிய தேவையாக உள்ளது. இவர்களை தாங்குவதை நிறுத்திவிட்டால் பெரும்பாலான மாணவர்கள் பெற்றோருடன் கூலி வேலைக்கு சென்று விடுவார்கள். அனைத்து மாணவர்களும் எங்களிடத்தில் வந்து வருந்தி அவர்களை தொடர்ந்து படிக்க வைத்து அவர்கள் குடும்பத்திற்கும், சபைக்கும், தேசத்திற்கும் குறிப்பாக சொந்த பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக நாங்கள் மாற எங்களை ஜெபித்து தாங்குங்கள் என்று அன்புடன் நம்மை கேட்டுக் கொள்கிறார்கள்.

## *பீல் ஆதிவாசி மாணவர்களை ஜெபித்து தாங்குவதில் உங்கள் பங்கு*

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நீங்களே இவர்களுக்கு போஜனம் கொடுங்கள் என்று இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தையின்படி கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் இந்த 800 பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக ஜெபிக்க, அவர்கள் கல்விப் பணியை தாங்க அன்புடன் அழைக்கிறோம்.

★ 1-8 வரை படிக்கும் மாணவர்களை மாதம் ரூ.700/- கொடுத்து ஜெபித்து தாங்க முன்வரலாம்.(வருடத்திற்கு ரூ.8400/-)

**ஜூலை 14** **அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.** சங்கீதம் 118:23

★ 9ம் வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவர்களை மாதம் ரூ.1000/- கொடுத்து ஜெபித்து தாங்கமுன்வரலாம்.(வருடத்திற்கு ரூ.12000/-)

★ முதல் மாத நிதிஉதவி பெற்றவுடன் தாங்கும் மாணவரின் புகைப்படம், Bio-Data சாட்சிகள் 20 நாட்களுக்குள் அனுப்பி வைக்கப்படும்.

★ 6 மாதங்களுக்கு ஒருமுறை தாங்கும் மாணவரின் கடிதங்கள், வாழ்த்து கடிதம், சிறப்பான அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

★ உங்கள் குடும்பத்தின் சார்பில் ஒன்று அல்லது அதிகமான மாணவர்களை தாங்க முன் வாருங்கள்.

★ இந்த Broucher-ஐ உங்கள் நண்பர், உறவினர்களுக்கு, சபைக்கு அறிமுகப்படுத்தி 800 பீல் மாணவர்களின் வாழ்க்கையில் ஒளிவீச பண்ணுங்கள்.

★ சபையாக போதகராகிய நீங்கள் உங்கள் சபையாருக்கு சொல்லி அறிமுகப்படுத்தி சபை மூலமாக பல மாணவர்களை தாங்க முன்வாருங்கள்.

★ இந்த Phamlet தமிழ், ஆங்கில மொழிகளில் அதிகம் தேவையானால் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். மேலும் email, whatsApp மூலமாகவும் பெற்று மற்றவர்களுக்கு forward செய்து உதவுங்கள்.

★ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நீங்கள் அனுப்பும் இந்த நிதிஉதவிக்கு **80G** வசதியும் உள்ளது.


சிறப்பு நிகழ்ச்சி


விளையாட்டு


படிப்பு



ஜூலை 15 இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.
சங்கீதம் 118:24



"...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" மத். 25:40
என்ற இயேசுவின் வாக்கின்படி தேவன் தாமே உங்களையும் உங்கள் சந்ததியையும், சபையில் உள்ள இளம் தலைமுறையையும் தேவன் ஆசீர்வதிப்பாராக!

1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை ஒரு ஆதிவாசி பிள்ளையை தாங்க மாதம் ரூ.700/- (ஆண்டிற்கு ரூ.8,400/-)

9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை ஒரு ஆதிவாசி பிள்ளையை தாங்க மாதம் ரூ.1,000/- (ஆண்டிற்கு ரூ.12,000/-)

## நிதி உதவி கொடுத்து தாங்க முன்வாருங்கள்

நிதி உதவி அனுப்பும் போது **Shalom Charity Mission** என்ற பெயருக்கு **(Tuticorin Branch) D.D. (or) Cheque** எடுத்து (அ) மணியாடர் மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம் (அ) ஷாலோம் ஊழியர்/பிரதிநிதிகளிடம் கொடுக்கலாம் (அ) வங்கி மூலமாக அனுப்பலாம்.

வங்கி மூலமாக அனுப்பின பின்பு எங்களிடம் மறவாது **SMS** அல்லது தொலைபேசி வாயிலாக தெரிவியுங்கள். உங்களுக்கு இரசீது மற்றும் மாணவர்களின் அறிக்கை அனுப்ப அது ஏதுவாகயிருக்கும்.

## Bank Account Details

**வங்கிக் கணக்கு** : SHALOM CHARITY MISSION (Tuticorin Branch)
**TMB வங்கிக் கணக்கு எண்** : 174100710400061 (I F S Code : TMBL0000174)
**Axis வங்கிக் கணக்கு எண்** : 105010100096779 (IFS Code : UTIB0000105)


Registred Office:
Shalom Charity Mission
5A/323A, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008, Tamil Nadu, INDIA.
Ph: 0461 2375468, Cell: 9345675468 (Bro. Sam)
Website: www.shalomcharitymission.org


**Field Office:**
**Shalom Charity Mission**
**Mission Kamdar Society,**
**DAHOD - 389 151, Gujarat, INDIA**
**Mobile: 9998979978** (Bro.Titus)
Email: ho@shalomcharitymission.org


All your donations are exempted U/S 80G (5) of income tax act,1961.

குறிப்பு : "இங்கே ஒரு பையன் இருக்கிறான் அவனிடத்தில் 5 அப்பங்களும் 2 மீன்களும் உண்டு" என்று இயேசுவினிடத்தில் அறிமுகப்படுத்திய அந்திரேயாவை போல தாங்குவோரை அறிமுகப்படுத்தி 800 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி மாணவர்களின் கல்வி பணியை அணைந்து விடாதபடி ஒளிவீச முன் வாருங்கள்.

ஜூலை 16 — **கர்த்தாவே, இரட்சியும்; கர்த்தாவே காரியத்தை வாய்க்கப்பண்ணும்.** சங்கீதம் 118:26

# அன்பான ஷாலோம் ஆதரவாளர்களே!




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். Shalom Charity Mission மூலமாக உங்களில் அநேகருடைய கரங்களில் கொடுக்கப்பட்டுள்ள Boxல் வருடத்திற்கு இரண்டு தடவையாக, அதாவது ஜூன், ஜூலை மாதங்களில் பீல் ஆதிவாசி பிள்ளைகளின் கல்விப் பணிக் கான ஆதரவுகளையும், டிசம்பர் மாதங்களில் பீல் ஆதிவாசி பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகவும் தங்களிடமிருந்து இந்த உண்டியலை சேகரித்து வருகிறோம்.

இந்த நாட்களில் பீல் ஆதிவாசி பிள்ளைகளுடைய படிப்பிற்காக தாங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கு உதவிட தாங்கள் சிறிது சிறிதாக சேகரித்து வைத்துள்ள உண்டியலில் சேகரித்த தொகைகளை நம் முன்னேற்றப் பணியாளர்களிடமோ அல்லது உங்கள் பகுதிக ளில் உள்ள பிரதிநிதிகளிடமோ அல்லது தூத்துக்குடி தலைமை அலுவலகத்திலோ கொடுத்து உதவும்படியாக உங்களை அன்பாய் கேட்டுக் கொள்கிறோம். தாங்கள் அவ்வாறு கொடுக்க இயலவில்லை யென்றால், எங்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் நாங்கள் உங்களிடம் வந்து அதற்கான சாவியை கொண்டு வந்து உங்களிடமுள்ள காணிக்கைகளை பெற்றுக் கொள்வோம் ஒரு வேளை உங்களுக்கு உண்டியல் சாவி தேவைப்பட்டால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள் (9345675468).

புதிய கல்வியாண்டிற்குள் சென்று இருக்கும் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படவும் அவர்களுக்கு கல்வி கட்டண நிதிஉதவி கிடைக்கப்பெற ஜெபியுங்கள். உங்களால் முடிந்த அளவு கொடுத்து உதவுங்கள். மேலும் நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக உங்கள் அனுதின ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் ஷாலோம் ஊழியர்களாக இணைந்து ஜெபித்துக் கொள்கிறோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்...(இயேசு)

மத்தேயு 25:40

ஜூலை 17

மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். சங்கீதம் 118:8

# திருநெல்வேலி மாவட்டம் - மருதகுளத்தில் நடைபெற்ற சந்தோஷப் பெருவிழா - ஓர் அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மே மாதம் 19, 20, 21-2017 ஆகிய தேதிகளில் நடைபெற்ற சந்தோஷப்பெருவிழா மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. "இயேசுவே ஆறுதல்"ஊழியத்தின் மூலமாக நடைபெற்ற இந்த சந்தோஷப் பெருவிழாவில், தேவப் பிள்ளைகளின் ஊக்கமான ஜெபங்கள் மற்றும் பிரயாசங்களினால், மூன்று நாட்களும் தடையில்லாமல் கூட்டங்கள் நடைபெறவும், திரளாய் ஜனங்கள் வந்து கலந்துக் கொள்ளவும் கிருபை செய்த தேவாதி தேவனுக்கே ஸ்தோத்திரங்களை செலுத்துகிறோம்.

தேவ சித்தத்தின்படி, குஜராத் மாநிலத்தில் "ஷாலோம்" மிஷனெரி ஊழியங்களை செய்கின்ற அன்பு பேராயர் தேவதாஸ் மற்றும் அன்பு அக்கா வஹிதா தேவதாஸ் அவர்களும் மூன்று நாட்களிலும் குறித்த நேரத்தில் வந்து தேவ செய்தியளித்ததைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

முதல் நாளில் எரேமியா 30:22ன்படி நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் என்ற தலைப்பிலும் 2ம் நாள் உபவாச ஜெபத்தில் 1 கொரிந்தியர் 11:1ன்படி நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் என்ற வசனத்தை முன்வைத்தும், 2ம் நாள் மாலையில் லூக்கா 15:32ன்படி சந்தோஷத்தைக் குறித்தும் தேவசெய்தியளித்தது ஆசீர்வாதமாக இருந்தது. கலந்துக் கொண்ட ஜனங்கள் மூன்று நாட்களிலும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

மட்டுமல்லாமல் "ஷாலோம்" மிஷனெரி ஊழியங்கள் நடைபெறுகின்ற பீல் இன மக்களைக் குறித்த அனுபவப்பூர்வமான சாட்சிகள் மற்றும் சனிக்கிழமை நடைபெற்ற உபவாச ஜெபத்தில் திரையில் காண்பிக்கப்பட்ட ஷாலோம் ஊழியங்களைக் குறித்த பகுதிகள் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் ஆச்சரியமாக இருந்தது. இந்த ஜனங்களுக்காகவும் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும் என்ற பாரத்தைத் தூண்டியது

. யோனா 4:11ன்படி நினிவேயின் 120000 ஜனங்களுக்காக பரிதபித்தக் கர்த்தர் தீர்க்கதரிசியாகிய யோனாவை அனுப்பி தீங்கிலிருந்து ஜனங்களைக் காத்தது போல 1.1/2 கோடி பீல் இன மக்களின் இரட்சிப்பிற்காகவும், சுவிசேஷ விதைகளை விதைக்க அன்பு பேராயர் குடும்பத்தை தேவன் தெரிந்து கொண்டதைக் குறித்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம். ஊழியப் பாதைகளில் உங்களின் பிரயாசங்கள், பாடுகள், தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிந்து புறப்பட்டு போனவிதம், வேறுபட்ட மொழி கலாச்சாரங்கள்

நிறைந்த ஜனங்கள் மத்தியில் தேவன் உங்களை பயன்படுத்துகிற விதம் இவைகளை நினைக்கும் போது கர்த்தர் எவ்வளவு நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்க முடிகிறது. 2 கொரிந்தியர் 3:5 ன்படி எல்லாமே தேவகிருபை என்பதை நினைத்துக் கர்த்தரைத் துதிக்கிறோம். இன்னமும் அதிகமாக கிருபைகளை கர்த்தர் உங்களுக்குத் தந்து பயன்படுத்த உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

1.1/2 கோடி பீல் இன மக்களும் இயேசுவின் வருகைக்கு ஆயத்த மாக்கப்பட உங்களின் ஊழியங்களுக்காக ஜெபிப்பதோடு மட்டுமல்லாமல் நேரடியாகவே வந்து அந்த அன்பான ஜனங்களை சந்தித்து “ஷாலோம்” மிஷனெரி ஊழியங்களோடு இணைந்து ஊழியம் செய்ய வேண்டும் என் கிற தாக்கத்தையும் பாரத்தையும் உண்டு பண்ணின ஷாலோம் மிஷனெரி குடும்பத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றி.

தேவன்தாமே உங்களையும் நீங்கள் செய்கின்ற “ஷாலோம்”
மிஷனெரி பணிகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இப்படிக்கு,
உன்னதமான ஊழியப் பணியில்
சகோ.J.V.ஜெபராஜ்.
**இயேசுவே ஆறுதல் ஊழியக் குடும்பம்** (மருதகுளம்)







எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்;
மல்கியா 3:12

# குஜராத் வாலிபர் முகாம் 2017

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஜூன் மாதம் "நீ கர்த்தருடைய பார்வையில் விலையேறப்பெற்றவன்" என்ற தலைப்பில் வாலிபர்களுக்கென்று விசேஷ கூடுகைகள் நடத்தப்பட்டது. இந்த வருடம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படி குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள நமது ஷாலோம் சபைகளை பகுதிவாரியாகப் பிரித்து அந்த அந்த பகுதியிலிருந்து தலைமை ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் தங்கள் பகுதிகளுக்குச் சென்று வாலிபர்களுக்கென்று விசேஷ கூடுகைகளை நடத்துவதற்கு விசேஷ ஒருநாள் பயிற்சி குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் தலைவர்களுக்கென்று 08.06.2017 அன்று தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது.

இதில் சுமார் 80 பேர்கள் கலந்துக் கொண்டனர். நீ விலையேறப்பெற்றவன் என்ற தலைப்பின் அடிப்படையில் பாடல்கள், குறுநாடகங்கள் நடத்திக் காண்பிக்கப்பட்டது. சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் வேதாகமத்திலிருந்த தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் வாழ்க்கையின் அடிப்படையிலிருந்து பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு தேவசெய்தியைப் பகிர்ந்துக் கொண்டார்கள். செய்தியின் மூலம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். இந்தப் பயிற்சியில் கலந்துக் கொண்ட அனைவரும் தங்கள் பகுதிகளுக்குச் சென்று வாலிபர்களுக்கென்று விசேஷக் கூட்டங்களை நடத்தினார்கள்.

குறிப்பாக குஜராத்தில் 9 பகுதிகளில் 12ம் தேதியிலும், மத்தியப்பிரதேசத்தில் 10 பகுதிகள், மற்றும் இராஜஸ்தானில் 19 பகுதிகளில் 17ம் தேதியன்றும் நடத்தப்பட்டது. குஜராத் தாகோத் பகுதியிலுள்ள வாலிபர்களுக்கென்று 9ம் தேதி தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகைகளில் மூன்று மாநிலங்களிலும் சேர்த்து சுமார் 2386 வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர்.

அநேக வாலிபர்கள் தங்கள் பாவவாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு, ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தேவன் அநேக சாட்சிகளை எழுப்பினார். தேவனுக்கே மகிமை!

ஜுலை 20 — சர்வ வல்லவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், உன்னை ஆசீர்வதிப்பார். ஆதியாகமம் 49:25

# குஜராத் வாலிபர் முகாம் 2017



அபிநயப்பாடல்கள்



குறு நாடகங்கள்




இயேசுவுக்காக தங்களை அர்ப்பணிக்கும் வாலிபர்கள்



செய்தியின் போது


ஜெப வேளை



செய்தியின் போது


குறு நாடகங்கள்

ஜுலை 21

**எவன் மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன் மேல் கிருபையாயிருப்பேன்; எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன் மேல் இரக்கமாயிருப்பேன்.**
யாத்.33:19

# Rev. G.T. பென்னட் (புதுச்சேரி) அவர்கள் பணித்தள வருகை

## இயேசுவின் இராஜ்ஜியம் வருவதாக! - ஜெப கருத்தரங்கு

புதுச்சேரியில் **A.G.** சர்ச், நடத்தும் நல்வாழ்வு ஊழியங்கள் மூலமாக Rev. G.T. பென்னட் அவர்கள் மிகுந்த ஜெபத்துடன், பல வருட வேதவாசிப்பு, ஆராய்ச்சியின் விளைவாக ஆவியானவர் ஒத்தாசையுடன் அவர்கள் வெளியிட்ட இயேசுவின் இராஜ்ஜியம் வருவதாக என்ற ஜெபகையேடு, மிக அழகான ஜெபத்தைக் குறித்த ஆவிக்குரிய புத்தகமாகும். இந்த புத்தகத்தை Rev. G.T. பென்னட் அவர்கள் ஊழியத்தின் மூலம் ஆயிரக்கணக்கான விசுவாசிகள், ஊழியர்கள், போதகர்கள் ஜெப வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட, ஜெபத்தில் அதிகமாக உறுதியாய் தரித்திருக்க ஜெபக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறார்கள்.

தேவ கிருபையால் இயேசுவின் இராஜ்ஜியம் வருவதாக ஜெப கையேடு புத்தகம் ஹிந்தி மொழியில் அச்சடிக்கப்பட்டு, நம் ஷாலோம் ஊழியர்கள் 600க்கும் அதிகமான போதகர்களுக்கு ஜூன் 5, 6, 7, 8 தேதிகளில் சிறப்பு ஜெப கருத்தரங்கும்; மூத்த தலைவர்கள் மற்றவர்களுக்கு பயிற்சி கொடுக்கவும் குஜராத்தில் தாகோத் மற்றும் இராஜஸ்தானில் செவன்யா, கோய்க்காவில் நடத்தப்பட்டது. **Rev. G.T. பென்னட்** அவர்கள் 4 நாட்கள் பணித்தளத்திற்கு வந்து மிக நேர்த்தியாக பயிற்சியை அளித்தார்கள். தலைவர் கூடுகை மற்றும் தாகோத் பணித்தள அலுவலக ஊழியர் கூடுகையில் தேவசெய்தி அளித்தார்கள். மேலும் அனைத்து ஷாலோம் சபை மூப்பர்கள், விசுவாசிகளுக்கு இந்த ஜெப கருத்தரங்குகளை சபைகளில் நடத்த 4000 ஜெப கையேடு புத்தகங்களை இலவசமாக வழங்கினார்கள்.

இந்த ஜெப கருத்தரங்கு மூலமாக அனைத்து சபை போதகர்கள் திருச்சபை வளர்ச்சிக்கும், தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையில் உள்ள தடைகள் எப்படி நீங்கும்? எதிராளியான சத்துரு யார்? எப்படி சத்துருவை மேற்கொள்ள வேண்டும்? இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மகிமை மற்றும் வேத வசனத்தில் உள்ள வல்லமையை ஆசீர்வாதத்தை எப்படி விசுவாச அறிக்கை செய்து ஜெபித்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்துக் கொள்ள ஏதுவாக இருந்தது. மேலும் தங்களையும், ஊழியங்களையும் புதுப்பித்துக் கொள்ள ஆசீர்வாதமாக இருந்தது.

நிச்சயமாகவே நம் ஷாலோம் சபைகளில் ஜெப ஆவியையும், விண்ணப்பத்தின் ஆவியையும் ஊற்றுவார் என்பதில் சந்தேகமில்லை. தேவனுக்கே மகிமை செலுத்தி ஜெப கருத்தரங்கத்தை நடத்தி 4000 கையேடுகளை கொடுத்து உதவிய **Rev. G.T. பென்னட்** அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். போதகர் அவர்களுடன் தொடர்பு கொள்ள **A.G.** சர்ச், புதுச்சேரி.

செல் நம்பர் 95433 36161



கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. சங்கீதம் 16:8

# Rev. G.T. பென்னட் (புதுச்சேரி) அவர்கள் பணித்தள வருகை




கலாச்சார வரவேற்பு





செய்தி வேளை




ஷாலோம் கிராம ஆலயத்திற்கு முன்பு




ஜெப கையேடுகளை பெற்றுக் கொண்ட சுதேச ஊழியர்கள்

ஜூலை 23

தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன்.

சங்கீதம் 16:1

## உங்கள் ஜெப உதவிக்கு ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

# HEAD OFFICE

## SHARING LOVE MISSION, Bro. Sam Gunaseelan

No. 5A/323,-3rd Streeet, Caldwell Colony, TUTICORIN-628008
Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

## Branch Office

### CHENNAI BRANCH OFFICE

**Bro. John Jeyasingh**

No.102-2nd Main Road Sathya Nagar,
Padi, CHENNAI - 600050,
Cell : 9698244577

### NAGERCOIL BRANCH OFFICE

**Bro. Robinson. S.**

29,,Distillery Road, State Bank Road,
Near Padma Benjamin Eye
Hospital,Nagercoil - 629001
Mob. : 9688144522, 9698444522

### MARTHANDAM BRANCH OFFICE

**Bro. Selvadurai.G**

M.T.N. Building, North Street,
Near Women's Police Station,
Marthandam, K.K. Dist. - 629165,
Cell : 9487689869,

### MADURAI BRANCH OFFICE

**Bro. Chandra Paul. S**

6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (P.O)MADURAI-625006,
Cell :9698644522

### TIRUNELVELI BRANCH OFFICE

**Bro. David. R**

No.23 Anna Nagar NGO B Colony
PalayamkottaiTIRUNELVELI-627007,
Cell 9698844599

### MUMBAI BRANCH OFFICE

**Bro. Jacob. N.**

Bathani Bhavan, Room No. 11, First
Floor, R. No. 2, Gate No. 6, Malvani,
Malad West, Mumbai - 400095,
Cell : 09819554974

### COIMBATORE BRANCH OFFICE

**Mr.Yardli Vinodh.J**

No: 31 LakshumiGarden, Palaya Pudur,
Periyanayakkan palayam,
Coimbatore -641020,Cell : 9698144522

ஜெப உதவிக்கு
9345675468
info@shalommission.in

## ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பி விட்டீர்களா?

அரசாங்கத்திலிருந்து பத்திரிகை இலவசமாக கொடுக்க முடியாதபடி பத்திரிகையின் வரவு செலவு கணக்குகளை ஒப்படைக்கும்படியாக கேட்டிருப்பதால் நாம் இதனை இலவசமாக அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை ரூ.100 அல்லது உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்பி ஊழியத்தைத் தாங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஜூலை 24 — ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. சங்கீதம் 16:11

# காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை E.M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும்போது கிளை (சிதம்பரநகர்) என்று குறிப்பிட்டு அனுப்பவும். அவ்வாறு அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறோம்.
- SHARING LOVE MISSION என்ற பெயருக்கு D.D. அல்லது Cheque எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவு தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் Cash (or) Cheque (or) D.D. மூலம் Deposit பண்ணலாம்.
- எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

வங்கிக் கணக்கின் பெயர் : Sharing Love Mission

Branch : Tuticorin. கிளை : தூத்துக்குடி

TMB Tamilnad Mercantile Bank Ltd — Be a step ahead of life

A/c. No. : 106100710400009
(I F S Code : TMBL0000106)

AXIS BANK

A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் Cash (or) Cheque (or) D.D. மூலமாகவோ அல்லது Net Transfer மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை e-mail, Phone, SMS, Whats app மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 93456 75468

ஜுலை 25 ..அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். சங்கீதம் 133:3

# ஷாலோம் 42

## வேத வினாப் போட்டி

**(சங்கீதம் 91 முதல் 150 வரையுள்ள புஸ்தகத்திலிருந்து விடைகாணவும்)**

1. சமுத்திரத்தில் விளையாடும்படி தேவன் உண்டாக்கினது எது?
2. எங்கே மோசேக்கு கடுங்கோபம் மூட்டினார்கள்?
3. எது வளரும் முன் உலர்ந்து போம்?
4. கர்த்தர் யாருக்கு சமீபமாயிருக்கிறார்?
5. கர்த்தரிடத்தில் அன்பு கூருகிறவர்கள் எதை வெறுத்துவிட வேண்டும்?
6. எதிலே களிகூர்ந்து மகிழ்ந்திடுவோம்?
7. யாருக்கு மிகுந்த சமாதானம் உண்டு?
8. எதை அப்பமாக புசித்து என் பானங்களை கண்ணீரோடு கலக்கிறேன் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான்?
9. ஏன் என் கண்ணீரிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது?
10. யாரை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்?

### வேதவினாப் போட்டியில் பங்குபெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள்

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும். கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் தெளிவாக எழுதினால் போதும்
2. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம் போன் நம்பர் போன்ற வற்றையும் சேர்த்து எழுதவும்.
3. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 16.07.2017

### வேத வினாப் போட்டி எண் 41–க்கான சரியான விடைகள்

1. உத்தமன், செம்மையானவன். சங்கீதம் 37:37
2. என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தால். சங்கீதம் 66:18
3. நீதியும் சமாதானமும். சங்கீதம் 85:10
4. சாந்தகுணமுள்ளவர்கள். சங்கீதம் 22:26
5. பூமியின் நடுவில் இரட்சிப்பைச் செய்து வருகிற தேவன். சங்கீதம் 74:12
6. நாட்களை எண்ணும் அறிவு. சங்கீதம் 90:12

ஜுலை 26 — வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக. சங்கீதம் 134:3

7. அவருக்குப் பயந்தவர்களிடத்தில். சங்கீதம் 25:14
8. உம்முடைய காருணியம். சங்கீதம் 18:35
9. ஆத்ம மீட்பு. சங்கீதம் 49:9
10. மட்டுப்படுத்தினார்கள். சங்கீதம் 78:41

**கடந்த ஜுன் மாத வேதவினா போட்டி எண் 41ல் பங்கு பெற்றவர்கள் 75 பேர்கள். சரியான விடையினைக் குறித்த நேரத்திற்குள் எழுதிய 43 பேர்களின் விபரங்கள் :**

சகோதரி பியூலா தாஸ் - ஹைதராபாத்
சகோதரி ஆலிவ் ஜெயபாலன் - கோயம்புத்தூர்
சகோதரி குளோரி கிரேஸ் - சென்னை
சகோதரி சரோஜினி எலிசபெத் - சென்னை
சகோதரி சுந்தரி விஜயபாஸ்கர் - சென்னை.
சகோதரி சலோமி லாரன்ஸ் - சென்னை
சகோதரி ஜாலி ராஜரத்தினம் - சென்னை
சகோதரி ஜெருஷா ஷெர்லின் - செங்கல்பட்டு
சகோதரி லில்லியன் ஜோசப் - திருச்சி
சகோதரி ஷீபா அசோகன் - வேலூர்
சகோதரி ஜெபகனி - சங்கரன்கோவில்
சகோ. வில்சன் தர்மராஜ் - போடிநாயக்கனூர்
சகோ. பொன்னுதுரை - மதுரை
சகோதரி கிரேனாப் விக்டர் - மதுரை
சகோதரி ஷீபா தீனதயாளன் - விருதுநகர்
சகோ. குணசிங் மாரியப்பன் - விருதுநகர்
சகோதரி சுகுனா நெப்போலியன் - சிவகாசி
சகோ. செல்வராஜ் சாலமோன் - வள்ளியூர்
சகோ. ஜாப்ரி ரசல் - பாலபள்ளம்
சகோ. ஜெபஸ்டின் - பூதப்பாண்டி
சகோதரி மாலதி ஜெயசெல்வம் - நாகை
சகோதரி கிளாரா - கன்னியாகுமரி
சகோதரி அஜிஷா மோல் - கன்னியாகுமரி
சகோதரி புளோரி ஞானஜாய் - நாகர்கோவில்
சகோதரி சந்தணம் - நாகர்கோவில்
சகோதரி சாந்தி சாலமோன - நாகர்கோவில்
சகோதரி டெய்ஸி ஜேக்கப் - நாகர்கோவில்
சகோதரி தாசனி பக்தவல்சலம் - மார்த்தாண்டம்
சகோதரி ஷெர்பா - திருநெல்வேலி
சகோதரி எஸ்தர் ஜேசன் - திருநெல்வேலி
சகோதரி பொன்லீலா சௌந்திரராஜ்-திருநெல்வேலி
சகோதரி ரூத் ஜெயராணி - திருநெல்வேலி
சகோதரி சாந்தி ராஜன் - பாளையங்கோட்டை
சகோதரி ஜெயசீலி - சாயர்புரம்
சகோதரி பார்லின் பிரியா - சாயர்புரம்
சகோ. அசோக் குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
சகோதரி சுகந்தி - தூத்துக்குடி
சகோதரி மல்லிகா மோகன் - தூத்துக்குடி
சகோ. லீனஸ் சாமுவேல் - தூத்துக்குடி
சகோதரி பாலின் ஜோன்ஸ் - தூத்துக்குடி
சகோதரி உமா ராஜதுரை - தூத்துக்குடி
சகோதரி செல்வராணி ஜெயராஜ் - தூத்துக்குடி
சகோதரி ரீட்டா ராபர்ட் - தூத்துக்குடி

**வேதவினாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களை வாழ்த்துகிறோம்**

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION,**
5A/323, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. TN.Ph. : 0461 - 2375468
வாசகர்கள் தங்கள் பதில்களை 9345675468 என்ற மொபைல் எண்ணிற்கு
SMS மூலமாகவோ Whats App மூலமாகவோ
அனுப்பலாம் அல்லது info@shalommission.in என்ற ஈ-மெயிலும் அனுப்பலாம்.

ஜுலை 27 — நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்; உபாகமம் 28:12




# நாட்டு நடப்புச் செய்திகள்

ஆண்டுக்கு 12000 விவசாயிகள் தற்கொலை : சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு தகவல், கடந்த 2013ம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 12000க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதாக சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழக வருவாய் துறையின் பெயர் மாற்றம் : தமிழக வருவாய் துறையின் பெயர் "வருவாய்" மற்றும் "பேரிடர் மேலாண்மைத் துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்தபடியே அரசு சான்றிதழ்களை செல்போன் மூலம் பதிவிறக்கம் செய்யும் "உள்ளங்கையில் சான்றிதழ்" என்ற திட்டத்தை முதல் அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தொடங்கி வைத்தார்.

பட்டப்படிப்பு சான்றிதழ்களில் தந்தைக்கு பதிலாக தாயாரின் பெயரை குறிப்பிடுவதற்கு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தோனேஷியன் ஓபன் சூப்பர் சீரிஸ் பாட்மிண்டன் தொடர் : இந்திய வீரர் ஸ்ரீகாந்த் சாம்பியன் பட்டம் வென்றார்.இந்தோனேஷிய ஓபன் பாட்மிண்டன் தொடரில் ஜப்பானின் கஸூமசா சகாயை வீழ்த்தி இந்திய வீரர் ஸ்ரீகாந்த் சாம்பியன் பட்டம் வென்றார்.

விமானத்தில் ரகளையில் ஈடுபட்டால் வாழ்நாள் முழுவதும் பறக்கத்தடை அடுத்தமாதம் முதல் அமல். விமானத்தில் ரகளையில் ஈடுபட்டால் வாழ்நாள் முழுவதும் விமானத்தில் பயணம் செய்ய தடை விதிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

## கீழ்க்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்


**தலைமை அலுவலகம்**

**SHARING LOVE MISSION**
**5A/323, Caldwell Colony,**
**3rd Street, Tuticorin - 628 008.**
**Tamil Nadu.**
**Phone : 0461-2375468, 2377737**
**Cell : 9345675468**

**பணித்தள அலுவலகம்**

Rt. Rev. Dr. V. DEVADASS
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Cell : 09377445468


ஜூலை 28 நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்.
உபாகமம் 28:12

# திருமண நாள் வாழ்த்து



ஜூலை 8 ஆம் தேதி தங்களது
இல்லறவாழ்வில் 32 வருடங்களை
நிறைவு செய்து 33 வது ஆண்டிற்குள்
அடியெடுத்து வைக்கும்

**பேராயர் V. தேவதாஸ்-சகோதரி வஹிதா தேவதாஸ்**

ஷாலோம் ஊழியத்தின் சார்பில் அனைவருமாக இணைந்து உளமாற வாழ்த்துகிறோம். கர்த்தர் தாமே அவர்களுக்கு நல்ல சுகம் பெலன் தந்து, இல்லற வாழ்க்கையையும் சந்ததியையும் ஆசீர்வதித்து, பீல் மக்கள் மத்தியில் தேவ இராஜ்ஜியத்தைக் கட்டவும், பாரத தேசத்திற்கு ஆசீர்வாதமாக அமையவும் அருள்புரிவாராக

Shalom Diocese in India
Church Network

SHARING LOVE MISSION
Missionary Seva

Shalom Charity Mission
Socio Economic Development

## ஜூலை மாத வாக்குத்தத்த கூட்டம் 2017



நாள் : ஜூலை 1 2017

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகம்**
No. 5A/323, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி-8.

தேவ செய்தி:

**Prof. C.S. கிறிஸ்டோபர்**



## ஜூலை மாதம் முழு இரவு ஜெபம்

மாதத்தின் முதல் **வெள்ளிக்கிழமை (07.07.2017)**

**07**

இடம் : **Grace Hall** (திருநெல்வேலி)
புதிய பேருந்து நிலையம் தெற்கு வாசல், L.I.C. கட்டிட கீழ்பகுதி

நேரம் : இரவு 9.30 முதல் அதிகாலை 4.00 மணி வரை



தேவ செய்தி:

**Prof. C.S. கிறிஸ்டோபர்**

அன்புடன் அழைக்கின்றோம்

ஜூலை 29 — கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்து கொள்ளுவீர். சங்கீதம் 5:12

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

### BLESS A CHILD PROJECT

| | | |
|---|---|---|
| மாணவர் பெயர் | : | ஆஷீஷ் B.கராடி |
| தகப்பனார் பெயர் | : | ஜாமா கராடி |
| தாயார் பெயர் | : | சமுடி புரியா |
| படிக்கும் வகுப்பு | : | 3 ம் வகுப்பு |
| பிறந்த நாள் | : | 03.06.2008 |
| இனம் | : | Male |
| ஊரின் பெயர் | : | ஜிரி |
| மாநிலம் | : | மத்தியப்பிரதேசம் |
| பள்ளியின் பெயர் | : | Sai Vinayak Public School, |



### மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:

இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாத போது சாராயம் பீடி தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவர் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டதினிமித்தம் வியாதியினால் 1 வருடம் மிகவும் கஷ்டப்பட்டார். விடுதலை மற்றும் சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் சகோதரி. காளி பேன் என்ற விசுவாசி இயேசுவைப் பற்றிக் கூறி இவருக்காக ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து கோபால்புரா சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார். பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, தன்னை அர்ப்பணித்து, 2009-ல் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று, தற்போது தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவரைப் பற்றி சில வரிகள்:** ஆஷீஷ் நன்றாக ஜெபிப்பான். பாடுவான். நடனம் ஆடுவான். விளையாட்டில் ஆர்வமுண்டு. இரட்சிக்கப்பட்டவன். இவனுக்கு 2 சகோதரர்கள் உண்டு.

**ஜெபியுங்கள்:** இவனுக்காக இவனுடைய படிப்பிற்காக, பெற்றோர் செய்யும் ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்

**Sponsor's Name : Sis.Anushiya, Madurai.**

**ஜெபித்து தாங்க முன் வாருங்கள்**

பிரியமானவர்களே நீங்களும் ஜெபித்து மாதம் ரூ.700 கொடுத்து பீல்ஆதிவாசி மாணவரைத் தாங்க முன்வரலாம்.

**Shalom Charity Mission** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D.அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்தி வையுங்கள்

Owned and Published by V. Devadass from No.5A/323, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008.
and Printed by S. Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin-628 002.
Editor : V. Devadass